**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE FAST TRACK COURT, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | STC No.149/2023 |
| Deposition of witness | | PW2 |
| Name | | திரு. சேக் முகைதீன் |
| Father's/Husband Name | | திரு. அப்துல் காதர் |
| Village | | சரபேந்திரராஜன்பட்டிணம் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 34/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20th day of June 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி எனது ஊர்காரர். எதிரியை எனக்கு ரகுமத்துல்லா கடன் கொடுக்க எதிரி அழைத்து சென்றது மூலமாக எனக்கு தெரியும். அதற்கு முன்பே எதிரியை சுமார் ஐந்து மாதமாக எனக்கு தெரியும். வாதி சொன்னதன் பேரில் தான் எதிரியை எனக்கு தெரியும். எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது. எதிரியும் வாதியும் 30.05.2023 அன்று பணம் கொடுக்கல் வாங்கல் செய்துக்கொண்டார்கள். அப்போது நானும் இருந்தேன். என்னை எதிரி தான் வாதியின் வீட்டிற்கு கடன் வாங்க அழைத்து சென்றார். அதன் பிறகு

எதிரிக்கும் எனக்கும் பழக்கம் எதுவும் இல்லை. 30.05.2023 அன்று எதிரி வாதியின் வீட்டிற்கு அழைத்து சென்றார். அதன் பிறகு எதிரி என்னை பார்க்கவில்லை. ஆனால் வாதி என்னை அவ்வபோது பார்ப்பார். எதிரி அதிராம்பட்டிணம் கடற்கரை தெருவை சேர்ந்தவர். ஆனால் வீடு எந்த இடத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. காசோலையை வாதி வசூலுக்கு தாக்கல் செய்தபோது போதிய பணம் இல்லாமல் திரும்ப வந்துவிட்டதாக வாதி என்னிடம் சொன்னார். ஏற்கெனவே இருந்த பழக்க வழக்கத்தின் அடிப்படையில் தான் என்னை எதிரி வாதியிடம் பணம் வாங்க அழைத்து சென்றார். தற்போது சாட்சி எதிரி இரண்டு வருடமாக பழக்கம் என்று சொல்கிறார். இரண்டு வருடத்தில் சுமார் ஐந்து முறை எதிரியை சந்தித்துள்ளேன். வாதியிடம் கடன் கேட்ட விபரத்தை எதிரி என்னிடம் சொல்லியது இல்லை. எதிரியை நான் ஐந்து முறை சந்தித்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. எதிரி ஏற்கெனவே பூர்த்தி செய்து கையொப்பம் போட்டுள்ள காசோலையை தான் எதிரி கொடுத்தார். ஏற்கெனவே பூர்த்தி செய்த காசோலையை வாதியிடம் கொடுத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து தற்போது வரை எல்லா விபரமும் எனக்கு தெரியும். எதிரி காசோலை கொடுத்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த காசோலையை எடுத்து என்னிடம் காண்பித்தார். எதிரி அவரது கையொப்பத்தை காசோலையின் இரு பக்கத்திலும் போட்டிருந்தார். எதிரி கொடுத்த காசோலையை முழுவதுமாக படித்து பார்த்தேன் அந்த காசோலையில் equitas small finance வங்கி குறிப்பிடப்பட்டிருந்தது. எதிரியை எனக்கு தெரியாது என்றும், எதிரி வாதிக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும், காசோலையை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றாலும் எதிரியின் வீடு எங்குள்ளது என்று எனக்கு தெரியாது

என்றாலும் வாதி சொல்லிக்கொடுத்தன் படி நான் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி கொடுத்த காசோலை எண்.000002 ஆகும், அதற்கு பிறகு தொர்ச்சியாக எண்கள் இல்லை. நான் காசோலையை பார்க்கவில்லை என்றாலும், வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.